# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● March 23, 2024 Weekly E-paper ● March 23, 2024


# அமைச்சரானார் பொன்முடி! அவமானப்பட்டார் ஆளுநர்!!

சுப. வீரபாண்டியன்



## இயக்கச் செய்திகள்

## விரல்கள் தோற்கடிக்கும்!

தலையங்கம்

## இந்தியா முழுவதும் காவியா? “விடமாட்டேன்”, ஸ்டாலின் சூளுரை!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● March 23, 2024 Weekly E-paper ● March 23, 2024


# அமைச்சரானார் பொன்முடி! அவமானப்பட்டார் ஆளுநர்!!

## சுப. வீரபாண்டியன்

சாதாரணமான சில நிகழ்வுகளைக் கூடச் சிலர் வரலாற்றில் பெரியதொரு செய்தியாக ஆக்கி விடுவார்கள். நேற்று நடைபெற்ற மாண்புமிகு அமைச்சர் பொன்முடி அவர்களின் பதவிப் பிரமாணம் அப்படிப்பட்டது தான்.

தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் ஒருவரை அமைச்சராக்குவது என்பது முழுக்க முழுக்க முதலமைச்சரின் அதிகாரத்துக்கு உட்பட்டது என்று நம் அரசமைப்புச் சட்டம் சொல்கிறது. அதை உச்ச நீதிமன்றமும் வலியுறுத்தி எடுத்துக்காட்டியது. அந்த நியமனம் சரியா, தவறா என்பதையெல்லாம் மக்களும் நீதிமன்றங்களும் முடிவு செய்வார்கள். இதில் ஆளுநருக்கு எந்தப் பங்கும் இல்லை!




ஆனால் தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர். என். ரவி கொஞ்சம் வித்தியாசமானவர். தான்தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர் என்று அவரே நினைத்துக் கொள்வார். அந்த நினைப்பில் சட்டத்தைத் தன் கையில் எடுத்துக் கொள்வார். அமைச்சர் பொன்முடி பதவிப் பிரமாணத்திலும் அதுதான் நடந்தது!

ஆளுநர் என்பவர் வெறும் அடையாளப் பதவியில் இருப்பவர். மற்றபடி அதிகாரம் எல்லாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சருக்குத்தான் உண்டு என்று நீதிமன்றங்கள் சுட்டிக் காட்டிய பிறகும், ஆளுநர் அடிக்கடி அடம்பிடிக்கிறார்!

எனக்குச் சட்டம் தெரியும், நான் நினைத்ததைத் தான் செய்வேன் என்கிறார். இப்போது அவருக்குச் சட்டத்தின் அடிப்படை விதிகள் கூடத் தெரியவில்லை என்பதை உச்ச நீதிமன்றம் வெளிப்படுத்தி விட்டது. அதற்குப் பின்பு உச்ச நீதிமன்றத்தில் நிபந்தனை அற்ற மன்னிப்பு கேட்டுக் கொண்டு, பொன்முடி அவர்களுக்கு பதவிப் பிரமாணமும் செய்து வைத்திருக்கிறார்.

ஒரு விதத்தில் ஆளுநர் நமக்கு நன்மைதான் செய்திருக்கிறார். மிக இயல்பாக முடிந்திருக்க வேண்டிய ஒரு நிகழ்ச்சியை, இவ்வளவு பெரியதாக்கி அந்த நிகழ்வுக்கு மிகப் பெரிய ஊடக வெளிச்சத்தையும் தந்துள்ளார்.

இப்போது பொன்முடியவர்கள் மாண்புமிகு அமைச்சர் ஆகி விட்டார். இனியும் ஆளுநர், அப்பதவியில் நீடிப்பது சரியாக இருக்குமா? ●



## கயல் தினகரனார் படத்திறப்பு








திராவிட இயக்கச் சிந்தனையாளர் மறைந்த ஐயா கயல்தினகரன் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு 17-03-2024 அன்று ராஜா அண்ணாமலை புரம் முத்தமிழ் பேரவை அரங்கத்தில் நடைபெற்றது. ஐயாவின் மகன்கள் தி. தமிழ்ச்செல்வன், தி. செழியன் வரவேற்றனர். நிகழ்ச்சிக்கு மாண்புமிகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை தாங்கினார். கயலையாவின் படத்தைத் திறந்துவைத்துப் பேருரையாற்றினார் தி.மு.கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு. நிறைவுரையாக குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், டி.கே. எஸ். இளங்கோவன், கலி. பூங்குன்றன், தமிழ்ச்சி தங்கப்பாண்டியன், எஸ்.பி.முத்துராமன், சேது சொக்கலிங்கம் ஆகியோர் உரைகளுக்குப் பின் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் நன்றி நவில நினைவரங்கம் நிறைவுபெற்றது.

## மணியம்மையார் படத்திறப்பு

பேரவையின் தலைமை அலுவலகத்தில் 16-03-2024 அன்று திராவிடர் கழகத் தோழர் அன்னை மணியம்மையார் அவர்களின் நினைவு நாளில் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன் தலைமையில் தோழர்கள் எட்வின், மதிவாணன், லோகபாலன், திராவிடமணி, மணிகண்டன், மனோகர், அசோக் உள்ளிட்ட தோழர்கள் புகழ் வணக்கம் செலுத்தினார்கள்.



## சென்னிமலை கலந்துரையாடல்






'தமிழர் உரிமை மீட்க இண்டியா கூட்டணி அவசியம்' என்ற கருத்துரையாடல் கூட்டம் திராவிட இயக்க தமிழர் பேரவையின் சார்பாக 17-03-2024 அன்று சென்னிமலை பகுதியில் நடத்தப்பெற்றது. தோழர் ரமேஷ் தலைமை தாங்கினார். நோக்கவுரையை ஸ்டுடியோ சரவணன் எடுத்துரைத்தார். கோவை மாவட்டச் செயலாளர் தோழர் கோவிந்தராஜன், சென்னிமலை ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் காயத்ரி இளங்கோ, குமராவலசு பஞ்சாயத்துத் தலைவர் இளங்கோ, சுயமரியாதை சமத்துவக் கழக மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் பாண்டியன் ஆகியோரின் உரைகளுக்குப் பின்னர், பேரவையின் துணைப் பொதுச் செயலாளர் தோழர் காசு. நாகராஜன் நிறைவுரை நிகழ்த்தினார். இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் தமிழ்க்குமரன், தோழர்கள் அர்ஜுனன், துரை,மணிகண்டன், அஸ்வின், நவீன்,சரத்குமார், கலையரசன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டார்கள் தோழர் முகமது சையது நன்றி கூற கூட்டம் நிறைவுபெற்றது.

## திராவிட முழக்கம் - வாசகர் வட்டம்

03-03-2024 அன்று ஈரோட்டில் 'திராவிட முழக்கம்' மாத இதழ் வாசகர் வட்டக் கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்குத்தலைமை, திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ். வரவேற்புரை, தமிழ்க்குமரன். "ஏன் வேண்டும் திராவிட முழக்கம்" என்பது குறித்து பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் அவர்கள் உரை நிகழ்த்தினார். இவ்வாசகர் வட்டக் கூட்டத்தில் பேரவை மாவட்ட பொறுப்பாளர் சேகர், ஈரோடு மாநகராட்சி மண்டல தலைவர் சுப்பிரமணியம், மாமன்ற உறுப்பினர் ஜெகதீசன், திமுக விவசாய அணி துணை அமைப்பாளர் ராசு உள்படப் பலர் கலந்துகொண்டனர். நிறைவாக சுந்தரமூர்த்தி நன்றி கூட கூட்டம் நிறைவு பெற்றது.



தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## விரல்கள் தோற்கடிக்கும்!

தந்தை பெரியார் தனக்காக, தன் கொள்கைக்காகப் போராடும் மாணவர்களிடம் “போராட்டத்தை நான் பார்த்துக் கொள்கிறேன், நீ போய் படி” என்று அனுப்பிடுவார்.

திண்டுக்கல்லில் நடைபெற்ற ஒரு தேர்தலின் போது தன்கட்சிக்காக மேடையில் பேசிக் கொண்டிருந்த மாணவனைப் பார்த்த பெருந்தலைவர் காமராசர் அவர்கள், அந்த மாணவனிடம் இப்போது நீ படிக்க வேண்டிய வயது. போய் படி என்று அறிவுரை சொல்லி அனுப்பினார், அந்தமாணவன் இன்று ஐ.ஏ.எஸ்.அதிகாரியாக இருக்கிறார் என்று பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் ‘ஒன்றே சொல் நன்றே சொல்’ என்ற தொலைக்காட்சி நிகழ்வின்போது விளக்கியிருக்கிறார். இது நேர்மையான தலைவர்களுக்கான அடையாளம், பண்பு.

தமிழ்நாட்டின் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்காத பிரதமர், தேர்தல் வந்தவுடன் ஓடோடி வருகிறார் தேர்தல் பிரச்சாரம் என்று, அதில் தவறு இல்லை.

ஆனால் கடந்த 18-03-2024 கோவையில் மோடிக்காக நடைபெற்ற ‘மோடி ரோட் ஷோ’ நிகழ்ச்சிக்காகச் சாலையோரம் நிறுத்தப்பட்ட மக்களுடன் கோவை, ஸ்ரீ சாய்பாபா வித்யாலய நடுநிலைப் பள்ளியின் 6 முதல் 8 வயது வரையான பிஞ்சு மாணவக் குழந்தைகள் 50 பேர்களை நிறுத்தி உள்ளார்கள் என்ற செய்தி சமூக வலைதளங்களில் வெளியாகி உள்ளது.



தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ள நிலையில், மோடியின் பா.ஜ.க தேர்தல் பிரச்சாரத்தில் ‘நடுநிலை’ப் பள்ளியின் மாணவக் குழந்தைகளைப் பயன்படுத்தியது அப்பட்டமான தேர்தல் விதிமீறல், மனித உரிமை மீறல் அல்லவா!

தேர்தல் பரப்புரைக்காகச் செல்லும் போது அரசு ஹெலிகாப்டர்/விமானத்தைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் ஆந்திராவில் உள்ள சிலக்கலூரிப் பேட்டையில் நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்துகொள்ள விமானப்படை ஹெலிகாப்டரைப் பயன்படுத்தி உள்ளார். இதுவும் தேர்தல் நடத்தை விதிகளுக்கு எதிரானது.

விதிமீறல் என்பது மோடிக்கு வாடிக்கைதான். இதற்கு மக்கள்தான் தண்டனை தரவேண்டும் வர இருக்கும் தேர்தல் நாள்களில்.

தேர்தல் ஆணையத்தை விட மக்களின் விரல்களுக்கே வலிமை அதிகம்!




17-03-2024 அன்று பெரம்பலூர் மாவட்ட திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் இணையவழி கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. மாவட்டத்தில் பேரவை கட்டமைப்புகளை விரிவு படுத்துவது, புதிய கிளைகள் உருவாக்கிப் பொறுப்பாளர்கள் நியமிப்பது, பேரவைக்கான வளர்ச்சிப் பணிகள், நகராட்சி முதல் ஊராட்சி வரையிலான கட்டமைப்பை உருவாக்குவது, எதிர்வரும் தேர்தலில் தி.மு.கழகக் கூட்டணி வெற்றிபெற ஆற்றவேண்டிய பணிகள் குறித்துக் காணொளி மூலமாக தோழர்களுடன் விரிவாக விவாதிக்கப் பட்டன.

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

ஆசிரியர் குழு:

**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408

# இந்தியா முழுவதும் காவியா? “விடமாட்டேன்”, ஸ்டாலின் சூளுரை!

## வழக்கறிஞர் இராம.வைரமுத்து

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக 28.08.2018 அன்று பொறுப்பேற்ற நாள் முதல் தலைவர் மு.க.ஸ்டாலின் சித்தாந்த போரில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு களமாடி வருகிறார். அன்று பொதுக்குழுவில் ஆற்றிய உரையில் “இந்தியா முழுமைக்கும் காவி வண்ணம் அடிக்க நினைக்கும் பா.ஜ.கவின் திட்டத்தை நான் நிறைவேற்ற விட மாட்டேன்” என்று அவர் சூளுரைத்தார்.

அதன்படி தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் பா.ஜ.க கூட்டணியைத் தோற்கடித்து இந்த மண்ணில் மதவாதத்தை நுழைய விடாமல் காவல் அரணாக காத்து நிற்கிறார் தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின்.

2019 நாடாளுமன்றத் தேர்தலில் தனது ஆளுமையால் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியை கட்டியமைத்து தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் மொத்தமுள்ள 40 நாடாளுமன்றத் தொகுதிகளில் 39 தொகுதிகளை வென்று அமோக வெற்றி பெற்றுத் தந்தார் மு.க.ஸ்டாலின். அப்போது 21 சட்டமன்ற தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தல்களில் 12 இடங்களையும் திமுக வென்றது.

2019 டிசம்பரில் நடைபெற்ற ஊரக உள்ளாட்சித் தேர்தலில் மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர்கள் 12 பேர், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் 243 பேர், ஒன்றியக் குழுத் தலைவர்கள் 112 பேர், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் 2090 பேர் என 6522 பொறுப்புகளை தி.மு.க கைப்பற்றியது. எதிர்க்கட்சி, உள்ளாட்சித் தேர்தலில் பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெறுவது இதுவே முதல் முறை.

2021ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் 132 இடங்களைப் பிடித்து வெற்றி பெற்றதன் மூலம் திமுகவின் 10 ஆண்டு கால தொடர் தோல்விக்கு முற்றுப்புள்ளி வைத்து அரியணை ஏறினார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

அதன் பிறகு நடைபெற்ற நகர்புற உள்ளாட்சித் தேர்தலில் பெருவெற்றி பெற்றதுடன் ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலிலும் மாபெரும் வெற்றியை ஈட்டினார் திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின்.

ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க அரசை விரட்டியடிக்க எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைத்து தமிழ்நாட்டைப் போலவே வலுவான கூட்டணியை கட்டமைத்தார் மு.க.ஸ்டாலின். அதனால் அச்சமுற்ற ஒன்றிய பா.ஜ.க அரசு தனது விசாரணை அமைப்புகள் மூலம் தி.மு.கவை வளைக்கப் பார்த்தது. “மடியில் கனமில்லை. வழியில் பயமில்லை” என்ற முடிவோடு ஒன்றிய அரசின் அடக்குமுறையை துணிவோடு எதிர்கொண்டார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.



தமிழ்நாட்டில் தி.மு.க கூட்டணியை உடைத்திடும் நோக்கத்தோடு பா.ஜ.க கூட்டணியில் இருந்து அ.இ.அ.தி.மு.க பிரிந்து நின்றது. ஆனால் “கடை விரித்தும் கொள்வாரில்லை” என்ற நிலைக்கு ஆளானது அ.இ.அ.தி.மு.க. சிந்தாமல் சிதறாமல் தொகுதிப் பங்கீட்டை சிறப்பாக முடித்து அதே வெற்றிக் கூட்டணியைத் தக்க வைத்து தலைமை ஏற்றுள்ளது தி.மு.க.

ஏறத்தாழ 50% இடங்களை கூட்டணிக் கட்சிகளுக்கு பகிர்ந்தளித்த பிறகு எஞ்சியுள்ள இடங்களில் தி.மு.க போட்டியிடுகிறது. அதற்கான வேட்பாளர்களும் நேர்த்தியாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தி.மு.க வேட்பாளர் பட்டியலில் புதியவர்கள் - 11 பேர், பெண்கள் - 3 பேர், பட்டதாரிகள் - 19 பேர், முதுநிலை பட்டதாரிகள் - 12 பேர், முனைவர் - 2 பேர், மருத்துவர்கள் - 2 பேர், வழக்கறிஞர்கள் - 6 பேர் ஆவர். இப்படி குறை காண முடியாதபடி சிறப்பான வேட்பாளர்களைக் களமிறக்கியது மட்டுமின்றி, ஒட்டுமொத்த ஒன்றியமே ஏற்றுக் கொள்ளும் வகையில் ஆகச் சிறந்த தேர்தல் அறிக்கையை வெளியிட்டு வெற்றியை மேலும் உறுதி செய்துள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

“அந்தந்த மாநிலங்களின் கட்சிகள் அவர்களது பகுதிகளில் அதிகபட்சத் தொகுதிகளை வெல்ல வேண்டும் என்பதே இந்தியா கூட்டணியின் முக்கிய நோக்கம். தேர்தலுக்குப் பிறகு, இக்கூட்டணியை வழிநடத்தும் காங்கிரஸுக்கு கூட்டணிக் கட்சிகள் அனைத்தும் ஆதரவளித்து ஆட்சியைக் கைப்பற்றும். இது தான் இந்தியா கூட்டணியின் தேர்தல் கணக்கு. இதில் தி.மு.க மிக முக்கியப் பங்காற்றும்” என்று டில்லியைச் சேர்ந்த மூத்த பத்திரிகையாளரும் அரசியல் விமர்சகருமான ஷரத் குப்தா கூறியுள்ளார்.

அதே போல் பெங்களூருவைச் சேர்ந்த மூத்த பத்திரிகையாளரும் அரசியல் நோக்கருமான விஜய் க்ரோவர் “தென்னிந்தியாவின் முக்கியமான கட்சியான தி.மு.க.வின் தலைவர் என்ற அடிப்படையில் இக்கூட்டணியில் மு. க. ஸ்டாலினின் அவர்களின் பங்கு முக்கியத்தும் வாய்ந்தது” என்று கூறியுள்ளார்.

தேசிய அளவில் பா.ஜ.கவை வீழ்த்தி இந்தியாவை முதல்வர் மு.க.ஸ்டாலின் மீட்பார் என்ற நமது கருத்தை நாடெங்குமுள்ள அரசியல் நோக்கர்களும், ஊடகவியலாளர்களும் உறுதிப் படுத்துகிறார்கள்.

பாசிசம் வீழட்டும் !

இந்தியா. வெல்லட்டும் |

●

Published By Dravida Iyyakka Tamilar Peravai.   Editor Suba. Veerapandian